செய்தி வெளியீடு எண்:323 நாள்: 25.06.2021

## செய்தி வெளியீடு

**அருள்மிகு தீர்த்தபாலீஸ்வரர் திருக்கோயிலில் களவாட வந்த நபர்களால் தாக்கப்பட்டு உயிரிழந்த ஒப்பந்த நியமனக் காவலர் மற்றும் அருள்மிகு நாகப்பச் செட்டி பிள்ளையார் திருக்கோயில் கட்டுமான விபத்தில் உயிரிழந்த பக்தர் ஆகியோரது குடும்பத்தினருக்கு மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. மு.க. ஸ்டாலின் அவர்கள் நிவாரண உதவித் தொகை வழங்கினார்கள்**

சென்னை, திருவல்லிக்கேணி, அருள்மிகு தீர்த்தபாலீஸ்வரர் திருக்கோயிலில் கடந்த 17.6.2021 அன்று திருக்கோயில் உண்டியலை களவாட வந்த நபர்களால் கோயில் ஒப்பந்த நியமனக் காவலர் திரு.த.பாபு என்பவர் தாக்கப்பட்டு, சிகிச்சைக்காக ராஜீவ் காந்தி அரசு பொது மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு, சிகிச்சை பலனின்றி 20.6.2021 அன்று உயிரிழந்தார். அக்காவலரை தாக்கிய நபர்கள் மீது வழக்குப் பதியப்பட்டு கைது செய்யப்பட்டுள்ளனர்.

சென்னை, தம்புசெட்டி தெரு, அருள்மிகு நாகப்பச் செட்டி பிள்ளையார் திருக்கோயிலில் கடந்த 5.6.2021 அன்று பூட்டியிருந்த கோயிலின் முகப்பில் நின்று சுவாமி தரிசனம் செய்த திரு. திவாகர் என்பவர் கோயில் திருப்பணிக்காக அமைக்கப்பட்டிருந்த சாரம் (கொடுங்கை) எதிர்பாராதவிதமாக அவர்மீது விழுந்து உயிரிழந்தார்.

இந்த இரண்டு துயரச் செய்திகள் குறித்து அறிந்த மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. மு.க. ஸ்டாலின் அவர்கள் இன்று (25.6.2021) தலைமைச் செயலகத்தில், அக்குடும்பத்தினருக்கு தனது ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்துக் கொண்டதுடன், உயிரிழந்த காவலர் திரு. பாபு மற்றும் திரு. திவாகர் ஆகியோரது குடும்பத்தினருக்கு தலா 5 இலட்சம் ரூபாய்க்கான காசோலையை நிவாரண நிதியாக வழங்கினார்கள்.

இந்நிகழ்வின்போது, மாண்புமிகு இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர் திரு.பி.கே. சேகர்பாபு, சட்டமன்ற உறுப்பினர் திரு. உதயநிதி ஸ்டாலின், இந்து சமய அறநிலையத் துறை ஆணையர் திரு. ஜெ. குமரகுருபரன், இ.ஆ.ப., மற்றும் அரசு உயர் அலுவலர்கள் உடனிருந்தனர்.

வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை-9

••••••••••